தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2025

**"எமது போராட்ட வாழ்வின் உண்மைகளைக் கலை, இலக்கியப் படைப்புகள் தரிசித்து நிற்க வேண்டும்."**
-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்

ஈழத்தமிழினம் தன்னிறைவு கொண்ட தாயகத்தையும் தொன்மையான மொழியையும் தனித்துவமான வரலாற்றுப் பாரம்பரியங்கள், கலை, பண்பாடுகளையும் கொண்டிருந்த வையகத்தின் மூத்த இனம். இவற்றை எம்மிடமிருந்து பறித்து எம்மினத்தை அழிக்கின்ற கொடுமையான போரை எதிர்த்துப் போராட வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம். அத்தகைய விடுதலைப் போரிலே தங்கள் உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களின் தியாகங்களை என்றென்றும் போற்றவேண்டியது தமிழர்களாகிய எமது கடமையாகும்.

சுவிஸ் நாட்டில் வாழ்ந்து வருகின்ற தமிழ்ச்சிறார்களும் இளையவர்களும் தாய்மொழியினதும் தாயகத்தினதும் மாவீரர்களினதும் சிறப்புகளை அறிந்து கொள்வதற்கும் அவர்களின் பேச்சாற்றலை வளர்த்தெடுக்கவும் ஆண்டுதோறும் தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி நடாத்தப்பெறுகின்றது.

பேச்சுப்போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக 2022 ஆம் ஆண்டு முதல் கீழ்க்காணும் புதிய விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

1. 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டிகள் மூன்று பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன:
    - 18 தொடக்கம் 22 வயது வரையான பிரிவு
    - 23 தொடக்கம் 30 வயது வரையான பிரிவு
    - 31 வயதும் அதற்கு மேற்பட்டோருக்குமான பிரிவு

2. இவர்களுள் 18 – 22 வயது வரையான பிரிவுக்கு பேச்சு ஆக்கம் வழங்கப்படும். ஏனைய இரண்டு பிரிவுகளும் தாமாகவோ அல்லது தமக்கு அறிமுகமானவர்களுடன் இணைந்தோ பேச்சுகளை ஆக்குதல் வேண்டும். நேரம் 4 – 6 நிமிடங்கள்.

3. தாமாகப் பேச்சினை ஆக்கும் பிரிவுகளுக்குப் பேச்சினை நினைவில் வைத்துப் பேசுதல் (மனனம்) எதிர்பார்க்கப்படமாட்டாது.

4. 13 வயதுப்பிரிவிலே முதலாம் இடத்தைப்பெறும் வெற்றியாளர் தமிழீழத் தேசிய மாவீரர் நாளிலும் 15 வயதுப்பிரிவிலே முதலாம் இடத்தைப்பெறும் வெற்றியாளர் தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் பிறந்தநாளிலும் பேசுகின்ற வாய்ப்பினைப் பெறுவார்கள். அத்தோடு, மாநிலங்களில் நடைபெறுகின்ற எழுச்சி நிகழ்வுகளில் பேசுகின்ற வாய்ப்பு அந்தந்த வயதுப்பிரிவுகளின் தலைப்புகளுக்கு ஏற்ப வழங்கப்படும்.

இப்பேச்சுப்போட்டிக்கு வயதுப்பிரிவின் அடிப்படையில் விரும்பிய அனைவரும் விண்ணப்பிக்கலாம். வலய மட்டத்தில் நடாத்தப்பெறும் பேச்சுப்போட்டிகள் (5 – 11 வயதுப்பிரிவு) **15.11.2025 சனிக்கிழமை பேர்ண், சூரிச்** ஆகிய மாநகரங்களில் நடைபெறும். 13 வயது தொடக்கம் 31 வயதும் அதற்கு மேற்பட்டவர்களுக்குமான பேச்சுப்போட்டிகள் **16.11.2025 ஞாயிற்றுக்கிழமை** நாடுதழுவிய வகையில் இவ்வாண்டு **பேர்ண் மாநகரில்** நடைபெறும்.

**தரப்பட்ட பேச்சுகளில் மாற்றம் செய்தல் அல்லது வேறு பேச்சுகளைப் பேசுதல் ஏற்றுக்கொள்ளப்பெறமாட்டாது.**

**தாமாகவே பேச்சுகளை ஆக்குவோர் உங்கள் பேச்சுகளை கணினியில் எழுதி 25.10.2025 ஆம் நாளுக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு மின்னஞ்சல் அல்லது தபால் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.** உங்கள் ஆக்கத்திலுள்ள **கருத்துகள் மதிப்பிடப்பெற்று 01.11.2025 ஆம் நாள் மீளவும் உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.**

**பேச்சுப்போட்டியின் முடிவுகள் பேச்சுப் போட்டி நடைபெறும் நாளுக்குரிய அனைத்துப் போட்டிகளும் நிறைவுபெற்றதும் அன்றே மண்டபத்தில் அறிவிக்கப்படும்.**

பங்குபற்றும் அனைவருக்கும் பங்குபற்றியமைக்கான சான்றிதழும் நினைவுப்பரிசும் வழங்கப்படுவதுடன், வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் **27.11.2025 வியாழக்கிழமை** தேசிய மாவீரர்நாளில் வழங்கப்படும். ஏதாவதொரு வயதுப்பிரிவில் மூன்று பேருக்குக் குறைவான போட்டியாளர்கள் பங்குபற்றுமிடத்து, அவர்களுக்கு நினைவுப் பரிசும் சான்றிதழும் மட்டும் வழங்கப்படும். வெற்றிப்பரிசில்கள் வழங்கப்படமாட்டாது.

**ம.ப.பா.**

பேச்சுப்போட்டியில் பங்குபற்றுபவர்கள் தங்கள் வயதுப்பிரிவிற்குரிய பேச்சினைத் தமிழர் நினைவேந்தல் அகவத்தின் www.trfswiss.com எனும் இணையத்தளத்திலும் தமிழர் நினைவேந்தல் அகவத்தின் முகநூலிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு நாள்: 25.10.2025 சனிக்கிழமை**

போட்டிக் கட்டணம்: 15 CHF

மாணவர்கள் முழுமைப்படுத்தப்பெற்ற விண்ணப்பப் படிவத்தினையும் போட்டிக் கட்டணத்தினையும் வகுப்பாசிரியர் / தமிழ்ப்பள்ளி முதல்வரிடம் வழங்குதல் வேண்டும். ஏனையோர் போட்டிக்கட்டணம் செலுத்திய பத்திரத்தின் பிரதியினையும் இப்பேச்சுப்போட்டியில் முதன்முறையாகப் பங்குபற்றுபவர்கள் தங்கள் வதிவிட அனுமதிப்பத்திரத்தின் பிரதியினையும் இவ்விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:**

Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439
4528 Zuchwil

**தபாற்கணக்கு எண்:** CH 07 0900 0000 6003 4553 3

**தொடர்புகளுக்கு:** 076 528 71 12, 076 426 27 80

## தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2025

### வயதுப்பிரிவும் பேச்சுகளின் தலைப்புகளும்

| வயதுப்பிரிவு | பேச்சுகளின் தலைப்புகள் |
|---|---|
| 5 வயதுப்பிரிவு (01.01.2020 - 31.12.2020 வரையில் பிறந்தோர்) | என் பெற்றோர் |
| 6 வயதுப்பிரிவு (01.01.2019 - 31.12.2019 வரையில் பிறந்தோர்) | தாய்மொழி கற்போம் |
| 7 வயதுப்பிரிவு (01.01.2018 - 31.12.2018 வரையில் பிறந்தோர்) | தமிழீழம் என் தாய்நாடு |
| 8 வயதுப்பிரிவு (01.01.2017 - 31.12.2017 வரையில் பிறந்தோர்) | அறம் வெல்லும் |
| 9 வயதுப்பிரிவு (01.01.2016 - 31.12.2016 வரையில் பிறந்தோர்) | மேஜர் சோதியா |
| 10 வயதுப்பிரிவு (01.01.2015 - 31.12.2015 வரையில் பிறந்தோர்) | பிரிகேடியர் துர்க்கா |
| 11 வயதுப்பிரிவு (01.01.2014 - 31.12.2014 வரையில் பிறந்தோர்) | கடற்புலிகள் |
| 13 வயதுப்பிரிவு (01.01.2012 - 31.12.2013 வரையில் பிறந்தோர்) | மண்ணின் மகுடம் எங்கள் மாவீரர்கள் |
| 15 வயதுப்பிரிவு (01.01.2010 - 31.12.2011 வரையில் பிறந்தோர்) | தமிழரின் தலைநிமிர்வு எங்கள் தலைவர் மாமா |
| 17 வயதுப்பிரிவு (01.01.2008 - 31.12.2009 வரையில் பிறந்தோர்) | கேணல் தமிழேந்தி |
| 18 தொடக்கம் 22 வயது வரை (01.01.2003 - 31.12.2007 வரையில் பிறந்தோர்) | தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் |
| 23 தொடக்கம் 30 வயது வரை (01.01.1995 - 31.12.2002 வரையில் பிறந்தோர்) | இளைய தலைமுறை எழுச்சியுற்றால் எமதாகும் தமிழீழம் |
| 31 வயதும் அதற்கு மேற்பட்டோரும் (31.12.1994ஆம் நாளும் அதற்கு முன்பும் பிறந்தோர்) | தமிழீழத்தின் விடுதலையே தமிழினத்தின் விடுதலை |